2018 ஜூன் 28]

பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 233, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கார்த்திகேயன், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

233—

மேம்பாலம்

***14033—திரு. க. கார்த்திகேயன்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ரிஷிவந்தியம் தொகுதி, சங்கராபுரம் ஒன்றியம், வடபொன்பரப்பி–அருளம்பாடி இடையில் முஸ்குந்தா நதியின் குறுக்கே மேம்பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், ரிஷிவந்தியம் தொகுதி, சங்கராபுரம் ஒன்றியம், வடபொன்பரப்பி–அருளம்பாடி இடையில் முஸ்குந்தா நதியின் குறுக்கே பாலம் கட்ட வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியிருக்கின்றார்கள். இதுகுறித்து, விழுப்புரம் மாவட்டத்தைச் சார்ந்த மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அண்ணன் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்றதன் அடிப்படையில், 2017–2018 ஆம் ஆண்டுக்கான பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம்–II-ன்கீழ் ரூ.196.60 இலட்சம் மதிப்பீட்டில் மேம்பாலம் அமைக்க நிதி ஒதுக்கப்பட்டு, அதை அமைக்கின்ற பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கார்த்திகேயன் அவர்கள்.*

[2018 ஜூன் 28

முற்பகல் 10–15

திரு. க. கார்த்திகேயன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரிஷிவந்தியம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வடபொன்பரப்பி–அருளம்பாடி இடையில் உள்ள முஸ்குந்தா நதியைக் கடந்துதான் 15–க்கும் மேற்பட்ட கிராமங்களைச் சேர்ந்த பொது மக்கள் செல்ல வேண்டியுள்ளது. முக்கிய வழித்தடமாக உள்ள அந்தச் சாலையை, மழைக் காலங்களில், குறிப்பாக 4 மாதங்களாக பொது மக்கள் கடந்து செல்ல முடியவில்லை. ஆகவே, டெண்டர் விடப்பட்டு 5 மாதங்கள் ஆகிவிட்ட நிலையில், அந்தப் பணிகளை விரைந்து முடித்துத் தருமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல, ஈருடையாம்பட்டு–மங்கலம் இடையே முஸ்குந்தா நதியில் உள்ள தரைப் பாலத்தின் வழியாகத்தான் அரும்புராம்பட்டு, ஆற்கவாடி, சுத்தமலை, ஈருடையாம்பட்டு, திருவரங்கம், கல்லிப்பாடி, வடமாமந்தூர் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள், பல்வேறு பணிகளுக்காக அருகிலுள்ள நகரங்களுக்குச் செல்ல வேண்டியுள்ள நிலை உள்ளது. அந்தக் கிராமங்களை இணைக்கின்ற முக்கிய பாலமாக இந்தத் தரைப் பாலம் உள்ளது. எனவே, இதனை மேம்பாலமாக உயர்த்தித் தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் மாவட்டம், ரிஷிவந்தியம் தொகுதி, சங்கராபுரம் ஒன்றியம், வடபொன்பரப்பி–அருளம்பாடி இடையில் முஸ்குந்தா நதியின் குறுக்கே 2017–2018 ஆம் ஆண்டுக்கான பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம் II (PMGSY)–ன்கீழ் 300–வது மீட்டரிலிருந்து 375–வது மீட்டர் வரை, சுமார் 75 மீட்டர் நீளத்திற்கு 1 கோடியே 96 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் மேம்பாலம் அமைக்க அந்த மாவட்டத்தைச் சார்ந்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கோரிக்கை வைத்து, அதை என்னிடம் வலியுறுத்தினார். உடனடியாக அந்தப் பாலம் கட்டும் பணியை எடுத்துக்கொண்டோம். அந்தப் பாலம் கட்டும் பணிக்கு அரசாணை

2018 ஜூன் 28]

எண் 105, நாள் 21–9–2017–ல் அனுமதி வழங்கப்பட்டது. இத்திட்டத்திற்கு 3–11–2017–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டிருக்கிறது. 30–3–2018 அன்று பணிகள் தொடங்கப்பட்டு, மண் வேலை முடிக்கப்பட்டிருக்கிறது. அந்த agreement period*–க்குள் பணிகளை வேகமாக முடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

அதேபோல, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மேலும் ஒரு கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அதுகுறித்து துறை அதிகாரிகளால் ஆய்வு செய்யப்பட்டு, கண்டிப்பாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கார்த்திகேயன் அவர்கள்.*

திரு. க. கார்த்திகேயன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரிஷிவந்தியம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திருக்கோவிலூர் ஒன்றியத்தைச் சார்ந்த தகடி–முடியனூர் இடையிலுள்ள ஓடையில் ஒரு தரைப் பாலம் உள்ளது. அந்தத் தரைப் பாலத்தைக் கடந்துதான் எடையூர், கூவனூர், அருதங்குடி, திருவரங்கம், மணலூர்பேட்டை, சீர்பனந்தாள் ஆகிய கிராமங்களுக்குச் செல்ல வேண்டிய ஒரு நிலை உள்ளது. மழைக் காலங்களில் அந்தச் சாலையில் தொடர்ந்து 4 மாத காலம் வாகனங்கள் செல்ல முடியாத காரணத்தால், அந்த தரைப் பாலத்தையும் மேம்பாலமாக மாற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.*

அதேபோல், திருக்கோவிலூர் ஒன்றியம், வேங்கூர் முதல் நத்தாமூர் வரை உள்ள சாலையிலும் இதே பிரச்சினை உள்ளது. அந்தப் பாலத்தையும் மேம்பாலமாக உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். எங்களுடைய மாவட்ட அமைச்சர் அவர்களுக்கு இதுபற்றி நன்றாகத் தெரியும். மழைக் காலங்களில் 6, 7 மாதங்களுக்கு திருக்கோவிலூரைச் சுற்றி வாகனங்கள் செல்ல முடியாத ஒரு சூழ்நிலை உள்ளது. ஆகையால், இதை அவசர முக்கியத்துவம் வாய்ந்ததாக எடுத்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை குறித்து, அந்த மாவட்ட அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும் என்று சொன்னார். அந்த மாவட்ட அமைச்சர் அவர்கள், இன்றைக்கு எந்தப் பாகுபாடும் இல்லாமல், அவர் எதிர்க்கட்சி உறுப்பினராக இருந்தாலும்கூட, அவருடைய தொகுதியில் செய்ய வேண்டிய பணிகள் குறித்தும், அந்த மாவட்டத்தில் இருக்கிற அத்தனைப் பணிகள் குறித்தும் அவ்வப்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவந்து, அதனடிப்படையில் பல்வேறு சாலைகள் மற்றும் பாலங்கள் அமைக்கும் முக்கியமான பணிகளை உள்ளாட்சித் துறையின் மூலமாக எடுத்துக்கொள்ள வழிவகை செய்திருக்கிறார். தற்போது உறுப்பினர் அவர்கள் திருக்கோவிலூர் ஒன்றியத்தில் மேம்பாலம் கேட்கிறார்கள். இந்தக் கோரிக்கையையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, அவசியம் இருப்பின், துறை அதிகாரிகளால் ஆய்வு செய்து, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள்.

திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சுழி ஊராட்சி ஒன்றியத்தில், குண்டாற்றிற்கு அருகிலே இருக்கக்கூடிய குச்சம்பட்டிபுதூர் கிராமத்திலே அமைக்கப்பட்டிருக்கும் ஆற்றுப் பாலம் மிகவும் பழுதடைந்த நிலையில் இருக்கிறது. அந்த ஆற்றுப் பாலத்தின் வழியாக அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய 10–க்கும் மேற்பட்ட கிராமங்களைச் சார்ந்தவர்கள் சென்றுவரக் கூடிய நிலை இருக்கிறது. குச்சம்பட்டிபுதூர், கடம்பங்குளம், உடையனம்பட்டி, உடைகுளம் போன்ற 10, 15 கிராமங்களுக்குப் போகக்கூடிய அந்தச் சாலையும், பாலமும் பழுதடைந்திருக்கின்ற காரணத்தால், போக்குவரத்து பாதிக்கப்பட்டு, குறிப்பாக மாணவர்களுக்கு மிகுந்த சிரமத்தைக் கொடுப்பதாக இருக்கிறது. எனவே, அந்தப் பாலத்தையும், சாலையையும் சீரமைப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன். பொதுவாக, PMGSY–பாரதப்

2018 ஜூன் 28]

பிரதமர் கிராமப்புறச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் மற்றும் நபார்டு திட்டத்தின்கீழ் கிராமப்புறச் சாலைப் பணிகளை எடுத்துக்கொள்ளும்பொழுது, இத்தகைய ஆறுகளின் குறுக்கே இருக்கக்கூடிய பாலங்களை உயர்மட்டப் பாலங்களாக மேம்படுத்தி அந்தச் சாலைகளை அமைப்பதற்கு முன்னுரிமை கொடுத்து, பணிகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும் நான் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை குறித்து துறை அதிகாரிகளால் உடனடியாக ஆய்வு செய்யப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு, பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். PMGSY மற்றும் நபார்டு போன்ற திட்டங்களின்கீழ் உயர்மட்டப் பாலங்கள் அமைக்கும் பணிகளை நாம் எடுத்துக்கொண்டிருக்கிறோம். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 234, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. மனோன்மணி, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

234—

மகளிர் கலைக் கல்லூரி

***6060—திருமதி ப. மனோன்மணி:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வீரபாண்டி தொகுதி, வீரபாண்டியில் புதிய மகளிர் கலைக் கல்லூரியைத் துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?